Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, NOVEMBER 28, 2023

செவ்வாய்க்கிழமை நவம்பர் 28, 2023 | ஒளி: 09 கதிர் 137 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE


## டிசெம்பர் 4 முதல் பாதணி வவுச்சர்

பாதணி வவுச்சர் விநியோகம் எதிர்வரும் 4ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (27) தெரிவித்தார். வவுச்சர் விநியோகம் எதிர்வரும் 27ஆம் திகதி நிறைவடையும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

740,000 சிறார்களுக்கு வவுச்சர்கள் விநியோகிக்கப்படவுள்ளதாக தெரிவித்த

தொடர்ச்சி P2

# ரொசான் அவுட்



## “என்னைக் கொன்றால் ரணிலும் சாகலவும் பொறுப்பு”



நடு வீதியில் வைத்து நான் கொல்லப்படலாம். அது இன்றோ நாளையோ அல்லது நாளை மறுநாளோ என்று எனக்குத் தெரியவில்லை. அவ்வாறு நான் கொல்லப்பட்டால் ஜனாதிபதி மற்றும் சாகல ரத்நாயக்க ஆகியோரே பொறுப்பேற்க வேண்டும் என விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ரொஷான் ரணசிங்க,

தொடர்ச்சி P2

அரசியலமைப்பில் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், விளையாட்டுத்துறை, நீர்ப்பாசன மற்றும் இளைஞர் விவகார அமைச்சுப் பொறுப்பில் இருந்து ரொஷான் ரணசிங்கவை, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, திங்கட்கிழமை (27) மாலை நீக்கியுள்ளார்.

உனடியாக அமுலுக்கு வரும் வகையில் நீக்கப்படுள்ளதாக விசேட கடிதம் மூலம் ரொஷான் ரணசிங்கவுக்கு ஜனாதிபதி செயலகத்தின் ஊடாக தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

வாராந்த அமைச்சரவைக் கூட்டம், திங்கட்கிழமை (27) நடைபெற்றது. அந்த கூட்டத்தின்போது, தான் எடுத்த தீர்மானம் தொடர்பில் எடுத்துரைத்துள்ளார்.

தொடர்ச்சி P2



## “ரணில் ஒரு பாம்பு எனக் கூறவில்லை”

“ரணில் ஒரு பாம்பு, அந்த பாம்பு எப்போது தீண்டும் என்று குறிப்பிட முடியாது” என நான் எங்கும் யாரிடமும் கூறவில்லை என முன்னாள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சரும் பொதுஜன பெரமுன எம்.பி.யுமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.
பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (27) விசேட கூற்றை முன்வத்த விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ரொஷான் ரணசிங்க, நாமல் ராஜபக்ஷ சரித் என்பவரை சினமன் கிரேன்ட் ஹோட்டலில் சந்தித்துள்ளார்.

தொடர்ச்சி P2




### இன முரண்பாடுகளை புரிந்து கொள்ள

## “தமிழ்நாட்டு அரசுகள் தவறி விட்டன”

இலங்கை உள்நாட்டுப் போரின்போது இந்தியா, குறிப்பாக தமிழ்நாட்டு அரசுகள் இன முரண்பாடுகளை புரிந்து கொள்ளத் தவறிவிட்டன என்று புகழ்பெற்ற நட்சத்திர சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## “ஐ.சி.சி தலைவரை 225 பேரும் சந்திக்க வாய்ப்பளிக்கவும்”



இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள ஐ.சி.சி தலைவரை ஜனாதிபதி சந்திக்கவுள்ள நிலையில், அவரை பாராளுமன்றத்துக்கு அழைத்து கிரிக்கெட் சபையில் உள்ள ஊழல் மோசடிகள் தொடர்பில் விளக்கமளிக்க 225 எம்.

தொடர்ச்சி P2

### சிறுவர் பாராமரிப்பு நிலையத்தில்

## 20 சிறுமிகள் துஷ்பிரயோகம்

இரத்தினபுரி மாவட்டத்தில் சிறுவர் பராமரிப்பு நிலையம் ஒன்றின் கட்டுப்பாட்டு அதிகாரியான பெண்ணின் கணவரால் அந்த இல்லத்தில் இருக்கும் 20 சிறுமிகள் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## சுழிபுரத்தைச் சேர்ந்த எழுவர் தனுஷ்கோடியில் தஞ்சம்



■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் - சுழிபுரம் பகுதியைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 பேர் தமிழகத்தின் தனுஷ்கோடியில் தஞ்சமடைந்தனர் என இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன. மன்னார் பகுதியில் இருந்து படகு மூலம் புறப்பட்டுச் சென்றவர்களே இவ்வாறு அகதிகளாக தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## மாவீரர்களுக்கு கதவடைத்து கௌரவம்




■ சண்முகன் தவசீலன்

தமிழீழத் தேசிய மாவீரர் தினமான, நவம்பர் 27ஆம் திகதி மாவீர்ரகளை கௌரவிக்கும் முகமாக புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத்தினர் முழுமையான கதவடைப்பை மேற்கொண்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

## சிவப்பு-மஞ்சள் கொடிகளை பலவந்தமாக அகற்றிய பொலிஸார்




■ சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தின் அளம்பில் மாவீரர் துயிலும் இல்லத்தில் வீதியோரத்தில் கட்டப்பட்டிருந்த சிவப்பு- மஞ்சள் கொடிகளை பொலிஸார் அகற்றினர். இதனால் ஆத்திரமடைந்த அங்கிருந்த மக்கள் பொலிஸாருடன் முரண்பாட்டில் ஈடுபட்டனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, துயிலும் இல்ல காணியானது யுத்தம் நிறைவடைந்த பின்னர் இலங்கை இராணுவத்தின் 24ஆவது எஸ்.எல்.என்.ஜி படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## 1,996 வீடுகளை நிர்மாணிக்க சீனாவுடன் ஒப்பந்தம்

குறைந்த வருமானம் பெறுபவர்கள், படைப்பாற்றல் கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு 1,996 வீடுகள் நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் சீன அரசின் உதவியுடன் ஒப்பந்தம் கைச்சாத்தானது.

இலங்கை அரசாங்கத்தின் சார்பாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவும், சீன அரசாங்கத்தின் சார்பாக இலங்கைக்கான சீனத் தூதுவர் குய் ஷென்ஹோங்வும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.


இதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு பத்தரமுல்ல, நகர அபிவிருத்தி அதிகார சபையின் கேட்போர் கூடத்தில் திங்கட்கிழமை (27) இடம்பெற்றது.

தொடர்ச்சி P2




## கிழக்கு ஆளுநர் விவகார தகவலில் உண்மையில்லை





ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ஹாபிஸ் நஸீர் அஹ்மத் கிழக்கு மாகாண, ஆளுநராக நியமிக்கப்படவுள்ளதாக வெளியாகும் செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லையென தகவல்கள் வெளியாகியுள்ளன.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ரொசான் அவுட்

வாராந்த அமைச்சரவைக் கூட்டம், திங்கட்கிழமை (27) நடைபெற்றது. அந்த கூட்டத்தின் போது, தான் எடுத்த தீர்மானம் தொடர்பில் எடுத்துரைத்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் ரொஷான் ரணசிங்கவின் பொறுப்பில் இருந்த அமைச்சுக்களை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தன்வசப்படுத்தியுள்ளார்.

இதில், விளையாட்டுத்துறை அமைச்சு, முன்னாள் அமைச்சரான எஸ். பி.திஸாநாயக்கவுக்கு வழங்கப்படலாம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

## “என்னைக் கொன்றால் ரணிலும் சாகலவும் பொறுப்பு”

திங்கட்கிழமை (27) தெரிவித்தார். தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (27) விசேட கூற்றை முன்வத்தபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறுகையில்,

பாராளுமன்றத்தில் 134 பேரின் ஆதரவுடன் ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்தோம். பொருளாதார பாதிப்புக்கு தீர்வு காண்பார் என்ற நம்பிக்கையில்தான் நான் அவருக்கு ஆதரவு வழங்கினேன். ஊழல் மோசடி பற்றி அதிகம் பேசினார். அதனால் தான் கிரிக்கெட் சபையின் ஊழல் மோசடியை பகிரங்கப்படுத்தினேன். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கடந்த வாரம் பாராளுமன்றத்துக்கு வருகை தந்து என்னை குற்ற வாளியாக்கும் வகையில் உரையாற்றினார்.

நாமல் ராஜபக்ஷ, சரித் என்பவரை சினமன் கிரேன்ட் ஹோட்டலில் சந்தித்துள்ளார். “ரொஷான் அண்ணாவை கவனமாக இருக்க சொல்லுங்கள். ரணில் ஒரு பாம்பு, அந்த பாம்பு எப்போது தீண்டும் என்று குறிப்பிட முடியாது” என்று குறிப்பிட்டுள்ளார். பாம்பு தவறான இடத்தில் படமெடுத்தால் அடிபட நேரிடும். ஊழல்வாதிகளை அடையாளப்படுத்திய என்னையா தீண்ட வேண்டும்?

நான் நீதிமன்றத்தை அவமதித்ததாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார்.. நான் நீதிமன்றத்தை அவமதிக்கவில்லை. நீதிபதிகள் சுயாதீனமாக செயற்படுகிறது. என்று குறிப்பிட்டேன். ஆனால், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதியரசரின் செயற்பாடுகள் மற்றும் அவரது உறவு நிலை தொடர்பில் கேள்வி எழுப்பினேன். மறுபுறம் சட்டமா அதிபர் திணைக்களத்தை விமர்சிக்கவில்லை. சட்டமா அதிபரின் மீது நம்பிக்கையில்லை என்று குறிப்பிட்டேன். என்னை சுற்றிவளைக்க வலான குற்றத்தடுப்பு பிரிவு குருநாகல் கலேவல யுரோன் நிபோனுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனது நிறுவனங்களை சுற்றி வளைக்க வேண்டும், பரிசீலனை செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டால் எனது 8 நிறுவனங்களின் சாவி கொத்தை தருகிறேன். விசாரணை செய்யுங்கள் எனக்கு பிரச்சினை ஒன்றும் இல்லை.

எனது யுரோ நிபோன் நிறுவனத்தில் இருந்து வாகனம் கைப்பற்றட்டுள்ளதாக கடந்த 25ஆம் திகதி தேசிய பத்திரிகைகளில் செய்தி வெளியாகியுள்ளன. ஆனால், எனது நிறுவனத்தில் இருந்து வாகனம் கைப்பற்றவில்லை

திருடர்களை பிடித்துக் கொடுத்ததால் என்னை இவ்வாறா நடத்துவது? 69 இலட்ச மக்களை பிரதிநிதித்துவப்படுத்தி அமைச்சரவையில் உள்ளேன். மக்களாணையுடன் பாராளுமன்றத்தில் உள்ளேன். என்னை அமைச்சு பதவியில் இருந்து ஜனாதிபதியால் நீக்க முடியும். ஊழலை வெளிப்படுத்தியதால் என்னை பழிவாங்க வேண்டாம் என்றார்.

## “ரணில் ஒரு பாம்பு எனக் கூறவில்லை”

ரொஷான் அண்ணாவை கவனமாக இருக்க சொல்லுங்கள். ரணில் ஒரு பாம்பு, அந்த பாம்பு எப்போது தீண்டும் என்று குறிப்பிட முடியாது என்று குறிப்பிட்டுள்ளார். பாம்பு தவறான இடத்தில் படமெடுத்தால் அடிபட நேரிடும். ஊழல்வாதிகளை அடையாளப்படுத்திய என்னையா? தீண்ட வேண்டும்? எனக்கேட்டார்.

இதன்போதே எழுந்த முன்னாள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சரும் பொதுஜன பெரமுன எம்.பி.யுமான நாமல் ராஜபக்ஷ , “ரணில் ஒரு பாம்பு,அந்த பாம்பு எப்போது தீண்டும் என்று குறிப்பிட முடியாது” என நான் எங்கும் யாரிடமும் கூறவில்லை.

பாராளுமன்ற சிறப்புரிமையில் இருந்து கொண்டு பொய்யுரைக்க கூடாது. ரொஷான் ரணசிங்கவுக்கு ஏதேனும் குறிப்பிட வேண்டுமானால் நான் அவரிடம் நேரடியாகக் கூறுவேன். மூன்றாம் தரப்பினர் ஊடாகத் தகவல் அனுப்ப வேண்டிய தேவை எனக்கு இல்லை. ஆகவே இந்தக் கருத்தை நீக்கிக் கொள்ளுங்கள் என்றார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் ரொஷான் ரணசிங்க ‘சரித் என்னிடம் பொய்யுரைத்திருந்தால் அதனை நீக்கிக் கொள்வேன். பொறுப்புடனா குறிப்பிடுகின்றீர்கள் என்று கேட்டேன். அதற்கு ஆம் என்றார். சரித் உங்களின் நண்பர். நீங்கள் தான் அவரை எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தீர்கள். நீங்கள் கடந்த வாரம் பாராளுமன்றத்தில் என்னைச் சந்தித்த போது “ரொஷான் அண்ணா, கவனமாக செயற்படுங்கள். உங்களைப் பழிவாங்கும் முயற்சி முன்னெடுக்கப்படுகிறது என்று கூறினீர்கள்தானே” என்றார். இதன் பின்னர் நாமல் ராஜபக்ஷ எம்.பி. எதுவும் கூறவில்லை.

## “ஐ.சி.சி தலைவரை 225 பேரும் சந்திக்க வாய்ப்பளிக்கவும்”

பி.க்களுக்கும் வாய்ப்பு ஏற்படுத்தி தர வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபாநாயகரிடம் கோரினார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (27) விசேட கூற்றை முன்வைத்தே இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

ஐ.சி.சி தலைவர் இன்னும் ஓரிரு தினங்களில் இலங்கைக்கு விஜயம் செய்ய வுள்ளார். அவரை ஜனாதிபதி சந்தித்து பேசவுள்ளதாக அறிய முடிகின்றது. கிரிக்கெட் சபையிலுள்ள ஊழல், மோசடிகள் தொடர்பில் அண்மையில் 225 எம்.பி.க்களும் இணைந்து பிரேரணை ஒன்றை நிறைவேற்றினோம்.

எனவே, இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள ஐ.சி.சி தலைவரை பாராளுமன்றத்திற்கு அழைத்து கிரிக்கெட் சபையில் உள்ள ஊழல், மோசடிகள் தொடர்பில் விளக்கமளிக்க 225 எம்.பி.க்களுக்கும் சபாநாயகரை வாய்ப்பு ஏற்படுத்தி தர வேண்டும்.அதன்போது நாம் கிரிக்கட் சபையால் அவருக்கு அனுப்பட்ட பொய்க் குற்ற ச்சாட்டுக்கள் தொடர்பில் விளக்கமளிக்க முடியும் என்றார்.

## சிவப்பு- மஞ்சள் கொடிகளை பலவந்தமாக அகற்றிய பொலிஸார்

இந்த துயிலும் இல்லத்தில் மக்கள் நிம்மதியாக அஞ்சலி செய்ய முடியாத நிலையில் இருந்து வருகின்றனர் இவ்வாறான பின்னணியில் துயிலுமில்ல காணியிலிருந்து இராணுவத்தினரை வெளியேறுமாறு மக்கள் கோரி வருகின்றனர். இராணுவத்தினர் வெளியேறாத நிலையில் வீதியோரத்திலேயே சுடரேற்றி அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

துயிலும் இல்ல காணியானது தனியார் காணியாக காணப்படுகின்ற நிலையில், இராணுவ ஆக்கிரமிப்பில் இல்லாதிருந்த ஒரு பகுதி காணியை தனிநபர் ஒருவர் காணி உரிமையாளரிடருந்து பெற்று வர்த்தக நிலையமொன்றை அமைத்து நடாத்தி வருகிறார். இதற்கும் மக்கள் தொடர்ந்து எதிர்ப்பு வெளியிட்டு வருவதோடு துயிலுமில்ல காணியில் இருந்து இராணுவம் மற்றும் வர்த்தக நிலையம் அமைத்த தனிநபர் ஆகியோரை வெளியேறி காணியை துயிலுமில்லத்துக்கு வழங்குமாறு கோருகின்றனர்.

இவ்வாறான நிலையில் இம்முறை 2023 தமிழ்த் தேசிய மாவீரர் நாளுக்கான ஏற்பாடுகளை செய்தபோது இந்த வர்த்தக நிலையத்திற்கு முன்பாக கொடிகளை கட்டி விளக்குகள் வைக்க வேண்டாம் என ஏற்பாட்டாளர்களுடன் வர்த்தக நிலைய உரிமையாளர் முரண்பட்டார். இதனால், பணிக்குழுவினருக்கும் கடை உரிமையாளருக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டு கைகலப்பாக மாறியுள்ளது.

அங்கு வந்த பொலிஸார், இரண்டு தரப்பினை சேர்ந்தவர்களிலும் சிலரை பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றதுடன், கட்டப்பட்டிருந்த சிவப்பு- மஞ்சள் கொடிகளை பொலிஸார் அகற்றியுள்ளனர். இதனால் ஆத்திரமடைந்த மக்கள் பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

## கிழக்கு ஆளுநர் விவகார தகவலில் உண்மையில்லை

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் தேர்தலில் போட்டியிட்டு பின்னர் அரசாங்கத்துடன் இணைந்து கொண்ட ஹாபிஸ் நஸீர் அஹ்மதுக்கு எதிராக முஸ்லிம் காங்கிரஸ் வழக்கு தாக்கல் செய்தது. இந்த வழக்கில் அவருடைய பாராளுமன்ற பதவி பறிக்கப்பட்டது.

இந்த நிலையில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை ஊவா மாகாண ஆளுநராக நியமித்து விட்டு , அதற்கு பதிலாக ஹாபிஸ் நஸீரை கிழக்கு ஆளுநராக,ஜனாதிபதி நியமிக்க இருப்பதாக சமூக வலைதளங்களில் செய்திகள் பகிரப்பட்டுள்ளன.

எனினும், அடுத்த தேர்தல் வரை கிழக்கு ஆளுநர் உள்ளிட்ட ஆளுநர் பதவிகளில் எவ்வித மாற்றமும் செய்யும் எண்ணம் அரசாங்கத்துக்கு இல்லையென நம்ப தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## 1,996 வீடுகளை நிர்மாணிக்க சீனாவுடன் ஒப்பந்தம்

மூன்றாண்டுகளில் நிர்மாணிக்கப்படும் இந்த 1,996 வீடுகளில் 1,888 வீடுகள் கொழும்பில் வசிக்கும் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கும், 108 வீடுகள் இந்நாட்டு படைப்பாற்றல் கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கும் ஒதுக்கப்படும்.

இதன்படி, பேலியகொடை துடுகெமுனு வீதியில் 615 வீடுகளும், தெமட்டகொட எழுமடுவ தோட்டத்தில் 586 வீடுகளும், மொரட்டுவ பெட்டரி தோட்டத்தில் 575 வீடுகளும், மஹரகம அம்பவத்தையில் 112 வீடுகளும், கொட்டாவ பழத்துருவத்தையில் 108 வீடுகளும் நிர்மாணிக்கப்படவுள்ளன. கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்காக 108 கொட்டாவ பழத்துருவத்தை வீடுகள் ஒதுக்கப்படவுள்ளன.

இந்த திட்டத்திற்கு சீன அரசு 552 மில்லியன் யுவான் நிதி உதவி வழங்குகிறது. இது இலங்கை நாணயத்தில் ஏறத்தாழ 24.48 பில்லியன் ரூபாவாகும்.

## 20 சிறுமிகள் துஷ்பிரயோகம்

சிறுவர்கள் இல்லங்களில் இருக்கும் துஷ்பிரயோகத்துக்கு உள்ளான 169 பிள்ளைகள் இந்த வருடத்தில் இதுவரையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (27) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் முக்கிய மக்கள் சக்தி எம்.பி.யான ஹேஷா விதானகே, பெரும்பாலான சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் துஷ்பிரயோக செயல்பாடுகள் இடம்பெறுவதாக பதிவுகள் தெரிவிப்பதாகவும் மேற்படி சிறுவர் பராமரிப்பு நிலையங்களை கண்காணிப்பதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே இவ்வாறு தெரிவித்த அவர், மேலும் கூறுகையில்,

இதுவரை 169 சிறுவர்கள் துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் அதில் 26 சிறார்கள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டு கர்ப்பிணிகளாக காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதில் சிறுவர் இல்லமொன்றின் பெண் காவலாளியின் கணவனால், அந்த இல்லத்தில் இருக்கும் 20 சிறுமிகள் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அதற்கு மேலதிகமாக சிறுவர்கள் தொடர்பில் பல்வேறு விடயங்கள் வெளிவருகின்றன. அவை தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

## சுழிபுரத்தைச் சேர்ந்த எழுவர்...

150,000 ரூபாய் பணம் கொடுத்து தாம் இலங்கையில் இருந்து வந்ததாக விசாரணையில் தஞ்சமடைந்தவர்கள் தெரிவித்துள்ளனர். பொருளாதார நெருக்கடி காரணமாகவே இவ்வாறு வந்ததாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அகதிகளாக தஞ்சமடைந்த 7 பேரையும் மரைன் பொலிஸார், மண்டபம் பகுதிக்கு அழைத்துச் சென்று பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## மாவீரர்களுக்கு கதவடைத்து...

மருந்தகங்கள் தவிர அனைத்து கடைகளும் பூட்டப்பட்டிருந்தது என புதுக்குடியிருப்பு வர்த்தக சங்க தலைவர் த.நவநீதன் தெரிவித்தார்.

மாவீரர்களுக்கான அஞ்சலி நிகழ்வுகளிலும் அனைவரும் கலந்து கொள்ளுமாறு புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத்தினர் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## “அத்திப்பட்டியை போல...

நடிகர் அஜித் நடித்த தென்னிந்திய திரைப்படமான “சிட்டிசன்” என்ற படத்தில் “அத்திப்பட்டி” என்ற கிராமமே காணாமல் போகும். அதேபோன்றே இன்னும் ஒரு 50 வருடங்களுக்கு பின்னர் மன்னார் தீவு அங்கு இருக்காது என்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி.யான வினோ நோகராதலிங்கம் குற்றம்சாட்டினார்.

அப்படி ஒரு தீவு இருந்ததற்கான அடையாளங்களையே இல்லாமல் செய்யும் வேலைகளையே அவுஸ்திரேலியாவின் டைட்டானியம் சாம்ஸ் லிமிட்டெட் என்ற நிறுவனமும் அரசும் கனிய மணல் அகழ்வாராய்ச்சி என்ற பெயரில் மன்னார் தீவில் முன்னெடுப்பதாக அவர் குற்றஞ்சாட்டினார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (27) இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்தில் சுற்றாடல்துறை அமைச்சுக்கான செலவீனத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மன்னார் தீவில் கனிய மணல் அகழ்வு அல்லது கனிய மணல் அகழ்வாராய்ச்சி என்ற பெயரில் அவுஸ்திரேலியாவின் டைட்டானியம் சாம்ஸ் லிமிட்டெட் என்ற நிறுவனம் அங்கு அகழ்வுப்பணி களை செய்து கொண்டிருக்கின்றது. அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கான திட்டமிடல்கள் அரசின், அரச

நிறுவனங்களின் ஆதரவோடு டைட்டானியம் சாம்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தின் துணை நிறுவனங்களோடு சேர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன என்றார்.

## டிசெம்பர் 4 முதல் பாதணி வவுச்சர்

அமைச்சர், இதற்காக மிகவும் கடினமான மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட சபை உறுப்பினர் ஹேஷா விதானகே, எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

## “தமிழ்நாட்டு அரசுகள் தவறிவிட்டன”

கோவாவில், ஞாயிற்றுக்கிழமை (26) நடைபெற்ற இந்திய சர்வதேச திரைப்பட விழாவில் (IFFI) அவரது வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட விளையாட்டு வாழ்க்கை வரலாற்றுத் திரைப்படமான ‘A Legendary 800 - Against All Odds’ குறித்த மாஸ்டர் கிளாஸ் அமர்வில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“இலங்கையில் உள்ள பிரச்சினைகளை இந்தியா ஒருபோதும் புரிந்து கொள்ளவில்லை. இது ஒரு நேர்மையான பதில். அதைச் சொல்ல எனக்குப் பயமில்லை. இந்தியா என்றால் மத்திய அரசை நான் சொல்லவில்லை, அங்குள்ள உண்மையான பிரச்சனை என்னவென்று தமிழக அரசுக்குப் புரியவில்லை. ஏனெனில் இலங்கையில் இது மிகவும் வித்தியாசமானது. இலங்கையில் தமிழில் சமூகத்தில் பல குழுக்கள் உள்ளன,” என்று முரளிதரன் கூறினார்.

“இது அனைத்தும் இணைக்கப்பட்டுள்ளது, ஆனால் அரசியல் ரீதியாக பிரிக்கப்பட்டுள்ளது. எனது தாத்தா இந்தியாவைச் சேர்ந்தவர். 1920களில் தேயிலைத் தோட்டங்களுக்குச் சென்றார். ஆங்கிலேயர்கள் எங்களை வலுக்கட்டாயமாக அங்கு அழைத்துச் சென்றனர். அதனால்தான் இலங்கையில் எங்கள் தலைமுறையினர் வாழ்கின்றனர். நாங்கள் அனைவரும் மத்திய மலைநாட்டில் வளர்ந்தவர்கள். இந்திய வம்சாவளி தமிழர்கள் என்று அழைக்கப்படுகிறோம். அவர்கள் இலங்கைத் தமிழர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள் அவர்கள் பேசும் போது, அவர்கள் பேசும் விதம், வேறு, ஆனால் அது ஒரே மொழி, ”என்று அவர் கூறினார்.

“எனவே சிலர் ஒரு பகுதியைப் பிரித்து ஒரு தனி நாட்டை உருவாக்க விரும்பினர். பிராந்தியத்தில் நாங்கள் தனி நாட்டை விரும்பவில்லை. நாங்கள் அனைவருடனும் இணக்கமாக வாழ விரும்பினோம்” என்று முரளிதரன் மேலும் கூறினார்.

இந்தியாவில் உள்ள ஒரு சில அரசியல்வாதிகள் தனது நாட்டில் உள்ள பிரச்சினையை புரிந்து கொள்ளவில்லை என்று கூறிய முரளிதரன், “அவர் இனத்தின் துரோகி” என்று குற்றம் சாட்டினார். “போர் மற்றும் என்ன நடந்தது என்பது பற்றி நான் எதுவும் கூறாததாலும், நான் அரசாங்கத்திற்கு ஆதரவாக பார்க்கப்பட்டதாலும் 5-10 சதவீத அரசியல்வாதிகள் நான் இனத்திற்குத் துரோகி என்று நினைக்கிறார்கள்,” என்று அவர் கூறினார்.

இப்படத்தில் நடிகர் விஜய் சேதுபதி நடிக்க முதலில் சம்மதம் தெரிவித்ததை அடுத்து நடந்த போராட்டங்கள் படத்தை இயக்கிய எம். எஸ்.ஸ்ரீபதி, சேதுபதியை நடிக்க வைப்பது பிரச்சனையாகிவிடும் என்று தாங்கள் எதிர்பார்க்கவில்லை என்றார்.

“நாங்கள் ஒரு விளையாட்டு வீரரைப் பற்றிய ஓர் ஊக்கமளிக்கும் திரைப்படத்தைச் செய்கிறோம் என்று நினைத்தோம். ஆனால் சினிமாவை சினிமாவாக பார்க்கவில்லை. இது ஒரு வகையான பிரசாரம் என்று மக்கள் நினைக்கிறார்கள். மேலும் பல அரசியல் படங்களோடு சிக்கிக் கொள்கிறது. அரசியல் மற்றும் திரைப்படங்களைப் பற்றிப் பேசுவதில் தவறில்லை, ஆனால் உங்களால் முடிந்ததைச் செய்ய முடியாமல் இருப்பது உங்களை மூச்சுத் திணறச் செய்வது போன்றது” என்று ஸ்ரீபதி கூறினார்.

“எனவே, நாங்கள் ஒரு முடிவை எடுக்க வேண்டியிருந்தது. அவர் [விஜய்] ஒருபோதும் விலக விரும்பவில்லை, ஆனால் அவர்தான் அதைப் பற்றி ஏன் இவ்வளவு வம்புகளை உருவாக்க வேண்டும் என்று பரிந்துரைத்தார்? அதனால் வேறு நடிகரைத் தேடினோம்,” என்று விளக்கினார்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியின் போது நடுவரால் சக்கிங் செய்ததாகப் புகார் அளிக்கப்பட்ட சம்பவத்தை நினைவுக் கூர்ந்த முரளிதரன், “1995ஆம் ஆண்டு நான் சிக்கலில் இருந்தபோது சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவன், இலங்கைக்காகவும், தமிழ்ப் போரிலும் விளையாடினேன். அதன் உச்சத்தில் - மதம் அல்லது எதையும் பார்க்காமல், இந்தியாவைப் போலவே இலங்கையும் எனக்கு ஆதரவளித்தது. 2009ஆம் ஆண்டு பாகிஸ்தான் சுற்றுப்பயணத்தின் போது லாகூரில் இலங்கை கிரிக்கெட் அணியின் பேருந்து பயங்கரவாதிகளால் தாக்கப்பட்டபோது அவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலையும் முரளிதரன் நினைவு கூர்ந்தார். “இது திகிலூட்டுவதாக இருந்தது. நாங்கள் உட்கார்ந்த வாத்துகளைப் போல ருந்தோம். எங்கள் பேருந்தில் இருந்த பாதுகாப்புப் பணியாளர்களிடம் ஆயுதங்கள் எதுவும் இல்லை” என்றார்.

“மலையக விடயங்களை விரைவாக செயற்படுத்த

# ஜனாதிபதி செயலணியை நியமிக்கவும்”



வரவு-செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள மலையகம் தொடர்பான விடயங்களை விரைவாக செயற்படுத்துவதற்கு புதிய ஜனாதிபதி செயலணி ஒன்று நியமிக்கப்பட வேண்டும் என அறிவித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

கேகாலை பெருந்தோட்ட நிறுவனத்தின் வேலை நிறுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள அலகொல்ல, லகிலேண்ட் கம்பாஹா, கேகீல்ஸ் பகுதிகளுக்கு விஜயம் செய்து ஞாயிற்றுக்கிழமை (26) நிவாரண பொருட்களைக் கையளித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்துரைத்த அவர், வேலை நிறுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு இன்றையதினம் நிவாரண பொருட்கள் வழங்கி வைத்திருந்தோம். வெகு விரைவில் அவர்களுக்குரிய கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் முன்னின்று செயல்பட்டு வருகின்றது.

தொடர்ந்தும் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கும் கள விஜயம் மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இம்முறை பாதீட்டில் பெருந்தோட்ட மலையக மக்கள் சார்பாக பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளது. இவ்வேளைத் திட்டங்கள் சரியாகவும் துரிதகதியில் மக்களைச் சென்றடைய ஜனாதிபதியின் கீழ் விசேடமாக செயலணி ஒன்று உருவாக்கப்பட்டு பொறுப்பு வாய்ந்த தலைவர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்பதே எம்முடைய வேண்டுகோளாக இருக்கின்றது.

மேலும், கடந்த வெள்ளிக்கிழமை பெருந்தோட்ட தொழிலாளர்களின் வேதன உயர்வு தொடர்பில் தொழில் அமைச்சில் விசேட கலந்துரையாடல் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையில் நடைபெற்றது.

இதன்போது தொழில் துறை எதிர்கொள்ளும் பிரச்சனை பெருந்தோட்ட தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பிலும் வாழ்க்கை செலவிற்கு ஏற்றார் போல அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் அதிகரித்ததை போன்று பெருந்தோட்ட தொழிலாளர்களின் வேதனமும் அதிகரிக்கப்பட வேண்டும். என்ற நிலைப்பாட்டை முன்மொழிந்திருந்தோம் என்று தெரிவித்துள்ளார்.

## மகளை துஷ்பிரயோகம் செய்த தந்தை தன்னுயிரை மாய்த்தார்

அஸ்ஹர் இப்றாஹிம்

தனது மகளைத் தொடர்ச்சியாக பாலியல் துஷ்பிரயோகம் செய்து வந்த தந்தையொருவர் தன்னுயிரை மாய்த்துக்கொண்ட சம்பவமொன்று அம்பாறையில் இடம்பெற்றுள்ளது.

அம்பாறை - பன்னலகம 2 சீ, குமண பிரதேசத்தைச் சேர்ந்த நபரின் மனைவி, கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் மத்திய கிழக்குக்கு வீட்டுப்பணிப் பெண்ணாகச் சென்றுள்ளார்.

இந்நிலையிலேயே, தனது மகளை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு தந்தை உட்படுத்தியுள்ளார்.

தனக்கு நேர்ந்த அநீதி தொடர்பில், தாயின் கவனத்துக்கு மகள் கொண்டு சென்றுள்ளார். இதுதொடர்பில் வெளியே சொன்னால், இரண்டு பிள்ளைகளுடன் தானும் தன்னுயிரை மாய்த்துக் கொள்வேன் என மனைவியை கணவன் மிரட்டியுள்ளார்.

எனினும், சம்பவம் தொடர்பில் தமண பொலிஸாரின் கவனத்துக்கு கொண்டு சென்றதை அடுத்து, சந்தேநபரை கைது செய்வதற்கு அவருடைய வீட்டுக்கு பொலிஸார் சென்றுள்ளனர். விடயத்தை அறிந்துகொண்ட சந்தேநபர், வீட்டில் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியால் தன்னுயிரை மாய்த்துக்கொண்டார்.

## பாரிய மணல் அகழ்வால் சுற்றுச்சூழல் பாதிப்பு

அஸ்ஹர் இப்றாஹிம்

அம்பாறை - தெஹியத்தக்கண்டிய பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட இகலகம கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ள வஸ்கமுவ தேசிய வனாந்தரம் மற்றும் மதுறு ஓயா தேசிய வனாந்தர பகுதியிலுள்ள அலிமங்கட உல்கிட்டு ஓயா ஆற்றில் பாரிய மண் அகழ்வு தொழிற்சாலைகள் நடத்திச் செல்லப்படுவதால் பிரதேசத்தை அண்டியுள்ள கிராமப்புற மக்கள் பாரிய சுற்றுச் சூழல் விளைவுகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்த ஆற்றில் 15 - 20 அடி ஆழத்திற்குக் குழிகள் தோண்டப்பட்டு இரும்பு தண்டவாளங்கள் மூலம் கொள்கலன் பயன்பாட்டில் ஆற்று மண் சேகரிக்கப்படும் பாரிய தொழிற்சாலைகள் முன்னெடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

மண் அகழ்வு உரிமத்தின் நிபந்தனைகள் மீறப்பட்டு இப்பாரிய ஆற்று மண் அகழ்வு இடம்பெறுவதால் இவ்வனாந்தர பகுதியில் சுதந்திரமாக உலவித்திரியும் 200ற்கும் மேற்பட்ட காட்டு யானைகள் கிராமத்திற்குள் உட்புகுந்து பயன்தரும் மரங்களையும்,சேனைப் பயிர் வகைகளையும் அழிப்பதோடு, உயிர்களுக்கும் உடமைகளுக்கும் தொடர்ச்சியாகச் சேதத்தை விளைவிக்கின்றன.

யானைகள் கிராமத்திற்குள் உட்புகுவதனை தடுக்கும் யானை வேலிகள் உடைக்கப்பட்டுள்ளமையாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக கிராமவாசிகள் கவலை தெரிவித்துள்ளனர்.



## மின் வடத்தில் தீ



எம். றொசாந்த்

யாழ்ப்பாணம் - கோப்பாய் பகுதியில் பிரதான மின் வடத்தில் (வயர்) தீ பற்றியமையால் அப்பகுதிக்கான மின்சாரம் சில மணி நேரம் தடைப்பட்டுள்ளது.

கோப்பாய், இராச வீதி பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (26) மாலை

இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பிரதான மின் வடத்தில் தீ பற்றியதைத் தொடர்ந்து, அப்பகுதி மக்கள் மின்சார சபையினருக்கு அறிவித்தனர். சம்பவ இடத்திற்கு விரைந்த மின்சார சபை ஊழியர்கள், மின்சாரத்தை துண்டித்து, தீயை அணைத்துள்ளனர்.

பின்னர் மீள அவற்றைச் சீர் செய்து அப்பகுதிக்கான மின்சாரத்தை வழங்கப்பட்டுள்ளது. குறித்த சம்பவத்தால், அப்பகுதியில் சில மணிநேரம் மின் தடை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலட்சாதிபதியாக்கும் கீரி மீன்கள்



ஷிஹான் பாறுக்

திடீர் காலநிலை மாற்றம் காரணமாக அதிகளவான கீரி மீன்கள் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிராந்திய கடற்கரைகளில் பிடிபடுகின்றன.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் 3 வகையான மீன்களான வளையா, சூரை, கெலவல்லா மீன்கள் என கரைவலைகள் மூலம் பிடிக்கப்பட்டுப் பல இலட்சம் வரை விற்பனை செய்யப்பட்டுள்ளது.

குறித்த கீரி மீன்களின் பெறுமதி 1 கிலோ கிராம் சுமார் 300 முதல் 400 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுவதுடன், ஒரு மீனவரின் நாள் வருமானமாக 05 முதல் 10 இலட்சமாகவும் உள்ளதாக கூறப்படுகின்றது.

இதேவேளை, கெலவல்லா, வளையா, சூரை போன்ற மீன்கள் விற்பனை செய்யப்படுகிறது.

இதன்படி, 1 கிலோ கிராம் வளையா மீன் 1,800 ரூபாய்க்கும் கெலவல்லா, 1 கிலோ கிராம் 2,000 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## டச்சு கட்டிடத்தை அபிவிருத்தி செய்ய திட்டம்

திருகோணமலை நகரில் பழைய டச்சு கட்டிடம் அமைந்துள்ள காணியை சுற்றுலா அபிவிருத்தி திட்டத்திற்காக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு மாற்றுவதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கான அமைச்சரவை பத்திரத்தை நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சமர்ப்பித்துள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தின் ஒரு பகுதிக்கான பெருநகர அபிவிருத்தித் திட்டத்தை ஏற்கனவே நகர அபிவிருத்தி அதிகாரசபை தயாரித்து விசேட வர்த்தமானி மூலம் வெளியிட்டுள்ளதாகவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

வணிக மற்றும் சுற்றுலா நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் திட்டத்தின் கீழ் உள்ள பகுதி அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

மேலும், கிழக்கு மாகாணத்தின் தலைநகரம் திருகோணமலை. நிலாவெளி கடற்கரை, மார்பிள் கடற்கரை, இயற்கை துறைமுகம், பிரடெரிக் கோட்டை மற்றும் நகரத்தில் உள்ள பல தொல்பொருள் இடங்கள் உள்ளூர் மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் இடங்களாக அமைந்துள்ளது.

திருகோணமலைக்கு வரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. எனவே, நகரின் பொது வசதிகளை மேம்படுத்துவது அவசியம். அதற்காக திருகோணமலை இன்னர் ஹார்பர் வீதியில் அமைந்துள்ள பழைய டச்சு கட்டிடத்தைப் பயன்படுத்துவதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபை திட்டமிட்டுள்ளதாகவும், அது எவ்வித பயன்பாட்டிற்கும் பயன்படுத்தப்படாமல் உள்ளதாகவும் அமைச்சரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கட்டிடத்தின் புராதனத் தன்மையைப் பாதுகாத்துத் திருத்தற் பணிகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நகர அபிவிருத்தி அதிகார சபைக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதற்கு மேலதிகமாக திருகோணமலைக்கு வரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் பொழுதுபோக்கு வசதிகள், நவீன உணவகங்கள், ஹோட்டல்கள், நகர அலங்காரம் மற்றும் சுகாதார வசதிகள் மற்றும் பல்பொருள் வணிக வளாகம் என்பன இதன்கீழ் மேம்படுத்தப்படும் எனவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேலும் சமர்ப்பித்த அமைச்சரவை பத்திரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சரஸ்வதி சிலை பிரதிஷ்டை

பசறை கல்வி வலயத்தில் அமைந்துள்ள மடுல்சீமை தமிழ் மகா வித்தியாலயத்தின் வளாகத்தில் புதிதாக பிரதிஷ்டை செய்யப்பட்ட சரஸ்வதி திருவுருவச் சிலை அங்குரார்ப்பண நிகழ்வு சைவ ஆகம முறைப்படி அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இந்நிகழ்வில், பாடசாலையின் முன்னாள் அதிபர் முத்துலிங்கம் உட்பட அதிதிகள் மற்றும் பாடசாலை சமூகத்தினரும் கலந்து கொண்டுள்ளனர்.







## பொலிஸார் மீது குண்டு வீச முயன்றவர் கைது

கொழும்பு - மாளிகாவத்தை ஆப்பிள் தோட்டம் பகுதியில் வெறிச்சோடிய வீடொன்றில் பதுங்கியிருந்த நபரைக் கைது செய்வதற்காக அங்குச் சென்ற மாளிகாவத்தை பொலிஸ் உத்தியோகத்தர்கள் குழு மீது வெடிகுண்டு வீச முயன்றதாக கூறப்படும் நபர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதாக மாளிகாவத்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த வெடிகுண்டும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அது இந்த நாட்டில் தயாரிக்கப்பட்டது எனவும் மாளிகாவத்தை பொலிஸ் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மாளிகாவத்தை பகுதியைச் சேர்ந்த 48 வயதுடையவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பயிர்களை மேயும் வேலிகளும் சூன்யமாகும் எதிர்காலமும்

பல மதங்களைக் கொண்ட நமது நாட்டில் வாழும் ஒவ்வொருவரும், ஏதோவொரு மதத்தை கட்டாயம் பின்பற்றுபவராய் இருப்பர். அந்த மதங்கள் போதிக்கும் ஒழுக்க நெறிகளையும், சமூக விழுமியங்களையும் பலரும் பின்பற்றுவர். சகல மத வழிபாட்டுத்தலங்களிலும், பாடசாலைகளிலும், ஆலோசனை நிலையங்களிலும் தினசரி நற்போதனைகள் இடம்பெறுகின்றன.

மத ஒழுக்கநெறிகள் முறையாக கடைப்பிடிப்பதில்லை என்பதை காரணங்காட்டி, நல்லொழுக்கங்கள் முறையாக கடைப்பிடிப்பதில்லை என்பதனால், ஞாயிற்றுக்கிழமைகளில், பிரத்தியே வகுப்புகளை நடத்தக்கூடாது. என்றும், அறநெறி உள்ளிட்ட சமயநெறி வகுப்புகளை நடத்தவேண்டும் எனவும் பல மாகாண சபைகளில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

பாவச் செயல்களிலிருந்து எண்ணங்களைப் பாதுகாத்து எவ்வாறு பரிசுத்தமாக வாழ்வது என்ற போதனைகள், நல்வாழ்வுக்கான ஆலோசனைகள் மதகுருமாரினாலும், ஆசிரியர்களினாலும், உள ஆற்றுப்படுத்துநர்களினாலும் அவரவர்களுக்குரிய நிலையங்களிலிருந்து முன்னெடுக்கப்படுகின்றன.

ஆனால், இதில் துரதிஷ்டம் என்னவென்றால், இவ்வாறு வழிப்படுத்துகின்றவர்களில், வேலியாக இருக்கின்றவர்களில் சிலர் மனோ இச்சைக்கு அடிமைப்பட்டு வழிதவறி பாவச் செயல்களில் ஈடுபடுகின்றனர். இவர்களின் இத்தகைய இழிசெயல்களினால் அப்பாவிச் சிறுவர்களும், பெண்களும் பாதிக்கப்படுகின்றனர்.

மதகுருமாரினால் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகும் சிறுவர்கள், ஆரியர்களினால் பாலியல் பலாத்காரங்களுக்கு உள்ளாகும் மாணவர்கள், வைத்தியரினால் பாலியல் இம்சைக்கு உள்ளாகும் நோயாளிச் சிறுவர்கள், தந்தையினால் வன்புணர்வுக்கு ஆளாகும் மகள், அண்ணனினால் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகும் தங்கை என பாதிக்கப்படுவோரை உறவு முறையின் ஊடாக அடுக்கிக்கொண்டே போகலாம்.

பாதுகாப்பு வேலிகளாக இருக்க வேண்டியவர்களினால் பயிர்களான சிறுவர்கள் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகும் சம்பவங்கள் ஆங்காங்கே நடந்தேறுகின்றன.

உறவுமுறைக்காரர்கள் மற்றும் சமூகத்தால் மதிக்கப்படுகின்றவர்களில் ஒரு சிலரின் இத்தகைய பாலியல் கொடுமைகள், துஷ்பிரயோக நடவடிக்கைகள் ஏனையவர்களுக்கு தலைகுனிவை ஏற்படுத்துகிறது.

சிறுவர் பாராமரிப்பு நிலையத்தின் பெண் காவலாளியின் கணவனால், அங்கிருக்கும் சிறுமிகளில் 20 சிறுமிகள் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அதில், நான்கு சிறுமிகள் கர்ப்பிணிகளாக உள்ளனர் என, இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க, பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (27)தெரிவித்தார்.

பாலியல் துஷ்பிரயோக சம்பவங்களில் ஒருசில சம்பவங்கள் மட்டுமே வெளிச்சத்துக்கு கொண்டுவரப்பட்டு தண்டனைகள் பெற்றுக்கொடுக்கப்படுகின்றன.

பல சம்பவங்கள் மூடி மறைக்கப்படுகின்றன. தங்களுடைய குடும்பத்தை முன்னேற்றுவதற்காக தன்னுடைய கணவனின் பாதுகாப்பு, பராமரிப்பின் கீழ் விட்டுச்செல்லப்பட்ட பல பெண் பிள்ளைகள், தந்தையால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அந்தளவுக்கு நிலைமை மோசமாகிக்கொண்டே போகின்றது.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# உதவாக்கரை அரசியல் முதல் சமூக கட்டமைப்புக்கள் வரை

மொஹமட் பாதுஷா

நாம் கடந்த பல வருடங்களாக மாற்றம், மறுசீரமைப்பு பற்றிப் பேசி வருகின்றோம். பெருந்தேசிய அரசியலில் மட்டுமன்றி சிறுபான்மை தமிழர், முஸ்லிம்களின் அரசியல் போக்கிலும் பல மறுசீரமைப்புக்களை மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது. இவ்வாறான ஒரு மறுசீரமைப்பு அல்லது மீள் ஒழுங்குபடுத்தல் தேவை என்பதை ஏற்றுக் கொள்வதே பெரிய மாற்றம்தான்.

இலங்கையில் சிறுபான்மைச் சமூகங்கள் எல்லா விடயங்களிலும் தமது தனித்துவத்தை, சம அந்தஸ்தை, உரிமைகளை உறுதிப்படுத்துகின்ற சமகாலத்தில் ஒரு பல்லின நாட்டுச் சூழலிற்குப் பொருத்தமாக தம்மைத் தகவமைத்துக் கொள்ள வேண்டும்.

எல்லாக் காலத்திலும் அரசாங்கத்தை அல்லது சிங்கள தேசத்தை மட்டும் குறைகூறிக் கொண்டிருக்காமல், தமது அணுகுமுறைகளில் காலத்திற்கு அவசியமான மாற்றங்களை உள்வாங்க வேண்டியிருக்கின்றது. இது விடயத்தில் கணிசமான தமிழ் அரசியல்வாதிகளும் சில முஸ்லிம் அரசியல்வாதிகளும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

முஸ்லிம் அரசியலில் மட்டுமன்றி சமூக, சமய கட்டமைப்புக்களிலும் ஒரு பாரிய மறுசீரமைப்பு, ஒழுங்குபடுத்தல் அவசியமாகி வருவதாக தெரிகின்றது. அரசியல் ரீதியாகவும் சமய மற்றும் சமூக ரீதியாகவும் முஸ்லிம் சமூகத்தை நெறிப்படுத்த வேண்டிய தேவைப்பாடு முன்னரை விட அதிகரித்துள்ளதாக கூறலாம்.

இதற்கு மிக முக்கியமான காரணங்களில் ஒன்று, சரியான தலைமைத்துவம் அல்லது எல்லா முஸ்லிம்களாலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தலைமைத்துவம் ஒன்று இல்லாமை எனலாம்.

பொருத்தமான தலைமைகள் இல்லை என்பது ஒருபுறமிருக்க, தற்போதுள்ள எந்த அரசியல், ஆன்மீக, சமூக தலைமையின் கீழும் ஒரு குடையின் கீழ் ஒன்றுபடுவதற்கு முஸ்லிம் சமூகம் விரும்பாமல் இருக்கின்ற போக்கையும் அவதானிக்க முடிகின்றது.

கார்டினால் மல்கம் ரஞ்சித் சொல்கின்ற அறிவுறுத்தல்களுக்கு கத்தோலிக்க மக்கள் கட்டுப்படுகின்றார்கள். பௌத்த மக்கள் கணிசமானவர்கள் தங்களது பௌத்தபீடங்களின் அறிவுரைகளை பேணுகின்றனர். இந்துக்களில் பெரும்பாலானவர்கள் தமது மத தலைமையின் அறிவுரைகளுக்கு செவி சாய்க்கின்றனர்.

முன்னைய காலங்களில் முஸ்லிம் சமூகத்திலும் இந்த கட்டுக்கோப்பான நிலைமை காணப்பட்டதை யாரும் மறுக்கவியலாது. ஆனால், அண்மைக்காலங்களில் இதில் சில மாறுதல்கள் உருவாகியுள்ளன.

மாற்றுக் பெயரில் இந்தக் கட்டுப்பாடு ஏதோ ஒரு வகையில் சிதறடிக்கப்பட்டுள்ளது.

மறுபுறத்தில் ஜம்மியத்துல் உலமா சபை போன்ற அமைப்புக்கள் எல்லா விவகாரங்களிலும் மிகச் சரியாகவும் ஆக்கப்பூர்வமாகவும் முஸ்லிம்களுக்காக முன்னிற்கின்றதா என்ற கேள்வியும் இதற்கு மறைமுக காரணமெனலாம்.

இதேவேளை, சமூக விடயங்களுக்கு முன்னின்று போராடுவதற்கு விரல்விட்டு எண்ணக் கூடிய முஸ்லிம்களைத் தவிர வேறு எந்த முஸ்லிம்களுக்கும் நேரமில்லை அல்லது துணிச்சல் இல்லை. இந்த விடயத்தில் தமிழ்ச் சமூகத்தின் முனைப்புக்கும் முஸ்லிம்களின் போக்குக்கும் இடையில் ஏணி வைத்தால் கூட எட்டாது.

சமூக ரீதியாக முஸ்லிம்களின் கட்டமைப்பு பலமாக இல்லை. புத்திஜீவிகள், பல்கலைக்கழக சமூகம், சமூக சிந்தனையாளர்கள், செயற்பாட்டாளர்கள் என்ற பிரிவினரில் ஒரு சிலர் சமூக விவகாரங்களில் முன்னிற்கின்ற போதிலும் கூட பொதுவாக ஒருவித ஒற்றுமையற்ற தன்மையும், போட்டா போட்டியும் அவதானிக்கப்படுகின்றது. எல்லோரும் எல்லா விவகாரங்களிலும் பெரிய அறிவாளிகள் போல படம் காட்ட முற்படுகின்றனர்.

எல்லாவற்றுக்கும் மேலாக அரசியல் ரீதியாக முஸ்லிம் சமூகம் பிளவுபட்டு,

பலவீனப்பட்டுப் போயிருக்கின்றமையே மேற்குறிப்பிட்ட விவகாரங்களை விட மிகப் பாரதூரமானதாகவும், மோசமான விளைவுகளுக்கு இட்டுச் செல்வதாகவும் இருக்கக் காண்கின்றோம்.

தமிழர்களிடையே வடக்கு (யாழ்ப்பாணம்), கிழக்கு (மட்டக்களப்பு), கொழும்பு மற்றும் மலையக தமிழர்கள் என்று நோக்கும் மனநிலை இன்று வரை மீதமிருக்கின்றது என்பதே உண்மையாகும். ஆனால், அதனையெல்லாம் மீறி தமது அரசியல் அபிலாசைகளுக்காக அவர்கள் ஒருமைப்படுகின்றனர்.

முஸ்லிம்களைப் பொறுத்தவரை இதனை விடச் சிறியதொரு பிராந்திய பாகுபாடு உள்ளது. அதிலும் குறிப்பாக வடக்கு, கிழக்கின் அரசியல் தலைவர்களை, நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தென்னிலங்கை முஸ்லிம் அரசியல்வாதிகள் பெரிய அளவில் அங்கீகரிப்பதில்லை என்றே கூறலாம். ஆனால் இதற்கு விதிவிலக்கான மக்களும் உள்ளனர்.

கிழக்கிலிருந்து ஒரு பெரிய முஸ்லிம் தலைவர் உருவாகி விடக் கூடாது என்பதில் தென்னிலங்கை முஸ்லிம் அரசியல்வாதிகள் மிகக் கவனமாக இருந்தனர் என்பது பொய்யல்ல. மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப்பின் பெருவளர்ச்சி கண்டு காழ்ப்புணர்வுற்ற கதைகள் இதற்கு ஒரு சான்றாகக் கொள்ளப்படலாம்.

வடக்கு, கிழக்கில் அதிலும் குறிப்பாகக் கிழக்கில் வாழும் முஸ்லிம்களிடையே தங்களது ஊருக்கு ஒரு எம்.பி. வேண்டுமென்ற அற்பத்தனமான சிந்தனை அண்மைக்காலத்தில் மேலோங்கி வருகின்றது என்றாலும், வெளிப் பிராந்தியத்தைச் சேர்ந்த தலைவர்களையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கின்றார்கள். இல்லாவிட்டால் முஸ்லிம் காங்கிரஸின் தலைவராக றவூப் ஹக்கீம் 23 வருடங்கள் பதவி வகிக்க முடியாது போயிருக்கும்.

இந்தப் போக்குகளில் அண்மைக் காலங்களில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. பிரதேசம், பிராந்தியம் கடந்து முஸ்லிம் அரசியல்வாதிகளை நோக்குகின்ற தன்மை முஸ்லிம் மக்களிடையே உருவாக வருகின்றது. அதுவே காலத்தின் தேவையாகவும் இருந்தது.

ஆயினும், முஸ்லிம் அரசியல்வாதிகள் தொடர்ந்தும் ஒருவித எதிர் மனநிலையுடனேயே செயற்படுகின்றனர். ஒருவரை ஒருவர் வெட்டி வீழ்த்துவதே பலரின் அரசியல் இலக்காக உள்ளது.

மாறாக, சமூகத்திற்காக ஒற்றுமைப்பட்டு, சமூகப் பிரச்சினைகளை மையப்படுத்தியதாக ஒரு ஒருங்கிணைந்த வேலைத்திட்டத்தை வகுத்து, அதனைக் கூட்டாக நடைமுறைப்படுத்தும் எந்தத் திட்டமும் இவர்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

முஸ்லிம் அரசியல்வாதிகளிடையே அரசியலுக்கு அப்பாலான உறவுகள், தொடர்புகள் இருக்கின்றன. இது தவிர்க்க முடியாததும் கூட. ஆனால், அரசியல் என்று வருகின்றபோது, மக்களை தமது கொள்கைகள், பிரசாரங்களின் ஊடாக பிரித்தாளுகின்றனர். இது தேர்தலுக்குப் பின்னரான கவத்திலும் தொடர்கின்றது என்பதே இங்குக் கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

'இலங்கை முஸ்லிம்களின் ஏகோபித்த அரசியல் தலைமை யார்?' என்று இப்போது கேட்டால் விடையில்லை.. சரி அதிகமான முஸ்லிம்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தலைவர் யார் என்றாலும் ஒரு நிமிடம் தடுமாறித்தான் போவோம். முஸ்லிம் சமூகத்தின் அரசியல் தலைமைத்துவப் பதவி இப்போதைய நிலையில் வெற்றிடமாகவே உள்ளது எனலாம். தற்போதுள்ள எந்த முஸ்லிம் அரசியல்வாதியையும் பொதுவான தலைவராக ஏற்றுக் கொள்ள சமூகம் தயாரில்லை. சமூகம் ஏற்றுக் கொள்ளும் தகுதியுடன் தலைவர்களும் இல்லை. இந்தப் பின்னணியில் சமூகத்தைப் பொறுத்தமட்டில் இது ஒரு உதவாக்கரை அரசியலாகியுள்ளது.

உண்மையில், முஸ்லிம்களுக்கு சரியான ஒரு தனித்த அரசியல் தலைமைத்துவமோ அல்லது கூட்டுத் தலைமைத்துவமோ கிடைக்குமென்றால் அதன்மூலம் நாம் மேலே குறிப்பிட்ட சமூக, சமய கட்டமைப்புக்களை மறுசீரமைப்பது இலகுவான காரியாகிவிடும். ஆக அரசியல் ரீதியான மறுசீரமைப்பே இங்கு அடிநாதமாகக் காணப்படுகின்றது.

பிளவுபட்டுப்போயுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான இரா. சம்பந்தனை பதவி விலகச் சொல்லி தமிழ்த் தரப்பிலிருந்து குரல்கள் எழுகின்றன. சமூக விடயங்களில் தன்னால் முடியுமானளவுக்கு பாடுபட்ட சம்பந்தன், '90 வயதில் இயங்கவில்லை' என்ற குற்றச்சாட்டுக்கள் பொதுவெளியில் முன்வைக்கப்படுகின்றன.

ஆனால், முஸ்லிம் சமூகத்தின் தலைவர்களாகவும் எம்.பி.க்களாகவும் இருந்து கொண்டு கடந்த இரு தசாப்தங்களாக உருப்படியாக சமூகத்திற்கு எதனையும் செய்யாத தலைவர்களுக்கு முஸ்லிம் மக்கள் இவ்வாறான எந்த அழுத்தத்தையும் கொடுக்கவில்லை. பதவி விலகச் சொல்லவும் இல்லை, தேர்தல்களில் சம்பந்தப்பட்ட எம்.பிக்களை தோற்கடிக்கவும் இல்லை.

மாறாக, முன்பிருந்த எம்.பிக்களே திரும்பத்திரும்பத் தெரிவு செய்யப்படுகின்றனர். புதிதாக உள்ளே வருகின்ற அரசியல்வாதிகளில் அநேகர் அதைவிடப் பிற்போக்கான அரசியலில் ஈடுபடுவதைக் காண முடிகின்றது. ஆனபோதும் சமூகமோ, பள்ளிவாசல்களோ, வாக்களித்த மக்களோ அவர்களிடம் எந்தக் கேள்வியும் கேட்பதில்லை.

தேர்தல் காலத்திலும், ஆட்சி மாறும் காலத்திலும் சட்ட மூலங்கள், வரவு செலவுத்திட்டம் வாக்கெடுப்புக்கு வரும் காலத்திலும் மட்டும் செய்வதல்ல சமூக அரசியல் என்பது! அதற்கு சீசன் வியாபாரம் என்று பெயர். மாறாக, எல்லாக் காலத்திலும் முஸ்லிம்களிற்காக அவர்களின் நீண்டகால, குறுங்கால பிரச்சினைகளை இயங்கிக் கொண்டிருப்பதே அரசியலாகும். இதற்காகத் தேவைப்படும் போது கூட்டாகவும், தனியாகவும் முன்னிற்க வேண்டும். ஆகவே, முஸ்லிம் எம்.பிக்கள் தாம் எதனைச் செய்து கொண்டிருக்கின்றோம் என்பதை முதலில் பிரித்தறிய வேண்டும். முஸ்லிம் அரசியலில் மட்டுமன்றி அதனோடிணைந்ததாக சமூக, சமய, நடத்தைக் கட்டமைப்புக்களில் ஏற்பட்டுள்ள இந்தச் சீரழிவுகளை, பின்னடைவுகளைச் சரி செய்வதாயின், அரசியல், சமூக சமய கட்டமைப்புக்களில் மறுசீரமைப்புக்கள் அவசியமாகின்றன.

இந்த உதவாக்கரை அரசியலில் மாற்றங்களைக் கொண்டு வருவதன் ஊடாக அந்த மறுசீரமைப்பைத் தொடங்கி வைக்க வேண்டியது காலத்தின் தேவை என்பதை இனிமேலும் உணராதிருக்க முடியாது.



## வாழ்வியல் தரிசனம்

இருவர் தங்களுக்குள் பேசியபடி சென்றார்கள். அவர்களில் ஒருவர், ஊரில் யாரோ இளைஞர்கள் சண்டை செய்ததாகச் சொன்னார்.

எங்கு நடந்தது என்பது பற்றிப் பேசாமல் சென்று கொண்டிருந்தனர்.

இதைக் கேட்ட வீதியின் அருகே நின்றிருந்தவர், "என்ன எங்கள் ஊரில் சண்டையா" எனக் கேட்டுவிட்டு, உடனே ஊருக்குள் சென்று, தனது கற்பனைகளையும் சேர்த்து, வாய், மூக்கு, வால் என்பவற்றைக் சேர்த்து, அங்குள்ள ஒருவருக்குச் சொல்ல, அவரும் அதற்கு மேலும் பல கதைகளைச் சோடித்துச் சொல்ல, ஊர்ச் சனங்களும் ஆவேசத்துடன் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு, அவர்களைத் தேடிச் சென்றார்கள்.

ஊரே பரபரப்படைந்தது. முடிவில் அங்கு ஒன்றுமே நடக்கவில்லை என்பதை அறிந்து, "யாரடா இதைச் சொன்னது" எனக் கேட்க, கதையைக் கட்டியவர்கள் ஒளித்துத் தப்பித்து விட்டார்கள்

தத்தமது காரியங்களைச் செய்தால், வீணான சிந்தனைகள் புறப்படாது.

கலவரங்கள் எல்லாமே வதந்திகளால்த் தான் உருவாகின்றன. யுத்தங்கள் கூட!

நன்றி-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### துப்புரவு பணியாளர்களை பாருங்கள்

கந்தளாய் பிரதேச சபைக்குட்பட்ட நகரசபை மாவத்தையில் குடியிருக்கும் கந்தளாய் பிரதேச சபையில் வேலை செய்யும் தாங்கள் எவ்விதமான அடிப்படை வசதி கூட இல்லாமல் இருப்பதாகத் துப்புரவுப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கந்தளாய் பிரதேச சபையில் கடமையாற்றும் துப்புரவுப் பணியாளர்களுக்குக் கடந்த நாற்பத்தைந்து வருடங்களுக்கு முன் கந்தளாய் பிரதேச சபையால் தற்காலிக வீடுகள் வழங்கப்பட்டன.

தற்போது குறித்த வீட்டில் சுவர்கள் வெடித்துள்ளதாகவும் கூரைத்தகடுகள் உடைந்து உள்ளதால் மழைக்காலங்களில் நீர் கொட்டுவதுடன், ஒரு வீட்டில் நான்கு குடும்பங்கள் வாழ்ந்து வருவதாகவும் அந்த நான்கு குடும்பங்களும் ஒரு கழிவறையை பாவித்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

மலசலக் கூடம் தற்போது நிரம்பி வழிவதாகவும் இவை தொடர்பாக உரிய அதிகாரிகளிடம் முறையிட்டும் எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ள வில்லையெனவும் கவலை தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தித் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

- எப்.முபாரக்



# மாவீரர் தினம் அனுஷ்டிப்பு

தமிழ் மக்களுக்கான உரிமைப் போரில் தமது உயிர்களை ஈகம் செய்த மாவீரர்களை போற்றி வணங்கும் மாவீரர் நாள் இவ்வாண்டும் கார்த்திகை 27ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது, இரத்த தான நிகழ்வு மற்றும் மரக்கன்றுகள் நடும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன.






















# சமந்தாவின் அதிரடி முடிவு



நடிகை சமந்தா, நாக சைதன்யாவை பிரிந்தவுடன் தற்போது அவர் மயோசிட்டிஸ் என்ற நோய்க்கு சிகிச்சை பெற்று வருகிறார். அவர் மறுமணம் செய்து கொள்வார் என்று கிசுகிசுக்கப்பட்ட நிலையில், இப்போது அவர் பிரதியுஷா என்ற தொண்டு நிறுவனத்தின் மூலம் இரண்டு பெண் குழந்தைகளை தத்தெடுத்து வளர்க்க திட்டமிட்டிருப்பதாக தெரிய வந்துள்ளது.

எனவே, சமந்தா மறுமணம் செய்து கொள்ள வாய்ப்பே இல்லை என்றும் குழந்தைகளை தத்தெடுத்து அவர்களுக்காக வாழ திட்டமிட்டு இருப்பதாகவும் கூறப்படுகிற நிலையில், அவருக்கு வாழ்த்துக்கள் குவிந்து வருகிறது. தற்போது அவர் சில திரைப்படங்களை தவிர்த்து விட்ட நிலையில், முழு குணமானவுடன் மீண்டும் திரையுலகில் வலம் வருவார் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

# "காதல் - தி கோர்"




இயக்குநர் ஜியோ பேபி இயக்கத்தில் நடிகர் மம்முட்டி, ஜோதிகா நடிப்பில் உருவான "காதல் - தி கோர்" திரைப்படம் கடந்த வாரம் வெளியான நிலையில், சமூக ஊடகங்களின் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. அரசு ஊழியரான மம்முட்டி தனது மனைவி ஜோதிகா மற்றும் மகளுடன் வசித்து வரும் நிலையில், தேர்தலில் போட்டியிட விண்ணப்பிக்கிறார். இந்நிலையில், அவருக்கு எதிராக அவருடைய மனைவி விவாகரத்து கோரி நீதிமன்றத்தை நாடுகிறார். தனது கணவர் ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்டு வருவதாகவும் குறிப்பிடுகிறார். இந்த பிரச்சினையில் இருந்து மம்முட்டி எப்படி மீள்கிறார்? தன்பாலின உணர்வாளர்கள், தங்கள் குடும்பத்தினர்களை எப்படி எதிர்கொள்கின்றனர்? என்பதுதான் இந்த படத்தின் மீதி கதை. முதன்முறையாக மம்முட்டி தன்பாலின ஈர்ப்பாளராக நடித்திருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

# கீர்த்தி சுரேஷின் த்ரில்லர்



தமிழ், தெலுங்கு திரையுலகில் முன்னணி நடிகையான கீர்த்தி சுரேஷ், 'கபாலி' படத்தில் நாயகி நடித்த ராதிகா ஆப்தேவுடன் இணைந்து ஒரு திரில்லர் வெப் தொடரில் நடிக்க இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

இருவருக்கும் கதையில் சம முக்கியத்துவம் தரும் வகையில் இந்த வெப் தொடரின் கதை உருவாக்கப்பட்டு இருப்பதாகவும் இந்த வெப்தொடரை அறிமுக இயக்குநர் தர்மராஜ் ஷெட்டி இயக்க இருப்பதாகவும் கூறப்படுகிறது. நெட்ப்ளிக்ஸ் ஓடிடிக்காக தயாராகும் இந்த தொடர் மிகுந்த வரவேற்பு பெரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ், தெலுங்கு திரையுலகில் முன்னணி நடிகையாக இருக்கும் கீர்த்தி சுரேஷின் இந்தி தொடர் அவருக்கு இந்தியில் ஒரு நல்ல அறிமுகம் ஆக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




COMING SOON

# 'கள்ளிப்பாலில் ஒரு டீ'

இயக்குநர் பா.ரஞ்சித் இயக்கத்தில் விக்ரம் நடித்த "தங்கலான்" திரைப்படம் விரைவில் வெளியாக இருக்கும் நிலையில், அவரது தயாரிப்பில் உருவாகியிருக்கும் திரைப்படம் குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

பா.ரஞ்சித் தயாரிப்பில் உருவாக இருக்கும் அடுத்த படத்திற்கு "கள்ளிப்பாலில் ஒரு டீ" என்ற டைட்டில் வைக்கப்பட்டுள்ளது. ஆந்தாலஜி திரைப்படமாக உருவாக இருக்கும் இந்த படத்தை 4 பெண் இயக்குநர்கள் இயக்கவுள்ளனர். அபிஷா, சினேகா பெல்சின், கனிஷ்கா, சிவரஞ்சனி ஆகிய நான்கு பெண் இயக்குநர்கள் இயக்கும் இந்த படத்தின் பெர்ஸ்ட் லுக் போஸ்டர் இணையத்தில் வெளியாகி வைரல் ஆகி வருகிறது. மேலும் இந்த ஆந்தாலஜி திரைப்படம் விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சூர்யா ஓய்வு



இயக்குநர் சிவா இயக்கத்தில் சூர்யா நடித்து வரும் 'கங்குவா' படத்தில் நடிகை திஷா பதானி, யோகி பாபு, கிங்ஸ்லி, கோவை சரளா, ஆனந்த் ராஜ் மற்றும் பலர் முக்கிய வேடங்களில் நடிக்கின்றனர்.

இந்த படத்திற்கு தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைக்கிறார். 3டி முறையில் சரித்திர படமாக உருவாகும் கங்குவா 10 மொழிகளில் வெளியாக இருக்கிறது.

'கங்குவா' படத்தின் சண்டைக்காட்சிகள் படமாக்கும் போது, நடிகர் சூர்யா விபத்தில் சிக்கினார். இந்த விபத்தில் சூர்யாவின் தோள் பட்டையில் லேசான காயம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இதையடுத்து படப்பிடிப்பு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது.

இந்த நிலையில், விபத்தில் காயமுற்ற நடிகர் சூர்யா சிகிச்சை பெற்று வந்துள்ளார். மேலும் மருத்துவர்கள் அறிவுறுத்தலின்படி, அவர் இரண்டு வாரங்கள் வரை ஓய்வு எடுக்க முடிவு செய்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.



புது டெல்லி

# “வெளிநாடுகளில் அது வேண்டாமே”

ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் மனதின் குரல் (மன் கி பாத்) நிகழ்ச்சி மூலம் அகில இந்திய வானொலியில் நாட்டு மக்களுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றுவார்.

இந்நிலையில், இம்மாத கடைசி ஞாயிறு (26) மனதின் குரல் 107ஆவது நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பேசியதாவது,

“இந்தியர்கள சிலர் தங்களது திருமணங்களை வெளிநாடுகளில் வைக்கின்றனர். இது தேவைதானா? நமது நாட்டிலேயே திருமணத்தை வைத்துக்கொண்டால், இந்தியாவின் பணம் வெளியே எங்கும் செல்லாமல் நாட்டுக்குள்ளேயே இருக்கும். பொருளாதாரத்தை மேம்படுத்த அது உதவியாக இருக்கும்.

வெளிநாடுகளில் இல்லாமல் நாட்டுக்குள்ளே இந்தியர்கள் திருமண கொண்டாட்டங்களை மேற்கொள்ள வேண்டும்.

அதேபோல், திருமணத்திற்காக பொருட்கள் வாங்கும்போது, இந்தியாவில் தயாரிக்கப்படும் பொருட்களுக்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டும்” என மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# மேலும் ஒரு நாடு இந்தியாவுக்கு சலுகை



தென்கிழக்கு ஆசிய நாடுகளில் ஒன்றான மலேசியா முக்கியச் சுற்றுலாத் தளமாக உள்ளது. இங்கு இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாட்டினர் அடிக்கடி சுற்றுலா செல்வது வழக்கம். சுற்றுலா வருவோரின் எண்ணிக்கையை அதிகரிக்கும் வகையில் அந்நாட்டு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இந்த வகையில், இந்தியாவில் இருந்து தங்கள் நாட்டிற்கு வருவதற்கு விசா தேவையில்லை என மலேசியா அறிவித்துள்ளது. டிசெம்பர் 1ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை இந்தியாவைச் சேர்ந்தவர்கள் மலேசியாவில் விசாயின்றித் தங்கியிருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தன்னுடைய மக்கள் நீதி கட்சியின் கூட்டத்தில் பிரதமர் அன்வர் இப்ராஹிம் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

ஆனால், எவ்வளவு நாட்களுக்கு அனுமதிக்கப்படும் என்பதை அவர் தெளிவாகக் குறிப்பிடவில்லை.

ஜம்மு காஷ்மீர்

# “போர் முழுமையாக முடிவடையவில்லை”



ஜம்மு - காஷ்மீரில் கடந்த சில நாட்களாக இந்திய இராணுவத்திற்கும் பயங்கவாதிகளுக்கும் இடையேயான சண்டை நடந்து வருகிறது.

கடந்த வாரம், ரஜோரியில் நடந்த ஒரு நடவடிக்கையில் இரண்டு கெப்டன்கள் உட்பட ஐந்து இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். அதே நடவடிக்கையில், ஆப்கானிஸ்தானில் பயிற்சி பெற்ற லஷ்கர்-இ-தொய்பா உயர்மட்ட தளபதி உட்பட இரண்டு பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்நிலையில், “ஜம்மு-காஷ்மீரில் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் முழுமையாக முடிவடையவில்லை, பாதுகாப்புப் படையினர் இழப்புகளைச் சந்திக்க நேரிடலாம், அதற்காக போராட்டத்தில் இருந்து பின்வாங்கப் போவதில்லை” என ஜம்மு காஷ்மீர் காவல்துறை இயக்குநர் ஜெனரல் ஆர்.ஆர் ஸ்வைன் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல்

# “நம்மை எதுவும் தடுக்காது”

இஸ்ரேல்-ஹமாஸ் அமைப்பினர் இடையேயான போர் கடந்த ஒக்டோபர் 7ஆம் திகதி தொடங்கியது. இதில் ஹமாசின் காசா முனை பகுதி மீது இஸ்ரேல் இராணுவம் தீவிர தாக்குதலை நடத்தியது.

இதனையடுத்து, ஒன்றரை மாதங்களுக்கு பிறகு 4 நாள் போர் நிறுத்தத்தை இஸ்ரேல் அறிவித்தது. மேலும், பிணைக்கைதிகளையும் ஹமாஸ் அமைப்பு விடுவித்து வருகிறது.

இந்நிலையில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு திங்கட்கிழம (27) காசா பகுதியில் பாதுகாப்புப் படையினரை சந்தித்து பேசியதாக அவரது அலுவலகம் தெரிவித்துள்ளது.

பெஞ்சமின் நெதன்யாகு பாதுகாப்பு படை வீரர்கள் மற்றும் தளபதிகளுடன் பேசினார் என்றும், பாதுகாப்பு தொடர்பான விளக்கத்தைப் பெற்றார் என்றும் அவரது அலுவலகம் சார்பில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறுகையில், “எதுவும் எங்களைத் தடுக்காது. போரின் அனைத்து இலக்குகளையும் அடைவதற்கான பலம், சக்தி, விருப்பம் மற்றும் உறுதிப்பாடு எங்களிடம் உள்ளது என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். அதையே நாங்கள் செய்வோம்” என்று தெரிவித்துள்ளார்.





அமெரிக்கா

# “புதிய ரத்தம் வேண்டும்”

அமெரிக்காவில் அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தல் நடைபெற உள்ளது.

இதில் தற்போதைய ஜனாதிபதியான ஜோ பைடன் (81) மீண்டும் போட்டியிட உள்ளார். அவரை எதிர்த்து முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் (77) தீவிரமாக களம் இறங்கியுள்ளார்.

இந்நிலையில், உலகெங்கும் இலட்சக்கணக்கான ரசிகர்களை கொண்ட தொழில்முறை பாடிபில்டரும், பிரபல ஹொலிவூட் முன்னணி கதாநாயகனும், அமெரிக்காவின் கலிபோர்னியா மாநில முன்னாள் கவர்னருமான அர்னால்ட் ஸ்வார்ஸ்னேக்கர் (76) ஜனாதிபதி தேர்தல் குறித்து கருத்து தெரிவித்தார்.

அப்போது அவர் கூறியதாவது,

“அமெரிக்கர்களை குறித்து கவலைப்படுகிறேன். 2024 தேர்தலில் மீண்டும் ஜோ பைடனுக்கும் டொனால்ட் டிரம்புக்கும் போட்டி என்பது ஏமாற்றமடைய செய்கிறது. இருவருக்கும் அதிக வயதாகி விட்டது என்பதனால் மட்டுமல்ல, அவர்கள் சிறப்பானவர்கள் என்று நான் கருதவில்லை. வெள்ளை மாளிகையில் புதிய சிந்தனைகளை உடைய தலைவர்கள் வேண்டும். இரு கட்சிகளிலும் அப்படி ஒரு புதிய முகம் இல்லாதது கவலை அளிக்கிறது எனத் தெரிவித்தார்.



இரண்டாவது இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டியிலும்

# அவுஸ்திரேலியாவை வீழ்த்தியது இந்தியா

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டியிலும் இந்தியா வென்றது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியிலும் ஏற்கெனவே வென்றிருந்த இந்தியா, திருவனந்தபுரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே 2-0 என முன்னிலை பெற்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: அவுஸ்திரேலியா

இந்தியா: 235/4 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: ருத்துராஜ் கைகவாட் 58 (43), யஷஸ்வி ஜைஸ்வால் 53 (25), இஷன் கிஷன் 52 (32), ரிங்கு சிங் ஆ.இ 31 (09) ஓட்டங்கள்)

அவுஸ்திரேலியா: 191/9 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் 45 (25), மத்தியூ வேட் ஆ.இ 42 (23), டிம் டேவிட் 37 (22) ஓட்டங்கள். பந்துவீச்சு: அக்ஸர் பட்டேல் 1/25 [4], ரவி பிஷ்னோய் 3/32 [4])

போட்டியின் நாயகன்: யஷஸ்வி ஜைஸ்வால்

இந்நிலையில் இரண்டு அணிகளுக்குமிடையிலான மூன்றாவது போட்டியானது, கௌகாத்தியில் இன்றிரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது.



காலி ஸசெக்ஸ் சர்வதேச கல்லூரி மாணவர்களுக்கு

# கரப்பந்தாட்ட பயிற்சி முகாம்

அஸ்ஹர் இப்றாஹீம்

இலங்கையின் தேசிய விளையாட்டான கரப்பந்தாட்டத்தை பாடசாலை மாணவர்கள் மத்தியில் பிரபலப்படுத்தி பயிற்சியளித்து தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் பிரகாசிக்கச் செய்யும் வகையில் காலி ஸசெக்ஸ் சர்வதேச கல்லூரி மாணவர்களுக்கான கரப்பந்தாட்ட பயிற்சி முகாம் அண்மையில் இடம்பெற்றது.

மீரிகம டட்லி சேனநாயக கல்லூரியின் கரப்பந்தாட்ட பயிற்றுவிப்பாளரும், இலங்கை இராணுவ பெண்கள் கரப்பந்தாட்ட அணிக்கான பயிற்றுவிப்பாளருமான இந்துநில் சாணக்க பாடசாலை நிர்வாகத்தின் அழைப்பின் பேரில் இந்த பயிற்சியை வழங்கி வருகிறார்.

இத்தாலிய சீரி ஏ தொடர்:

# ஜுவென்டஸ்-மிலன் போட்டி சமநிலையில் முடிந்தது

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற இன்டர் மிலனுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் ஜுவென்டஸ் சமப்படுத்தியது.

ஜுவென்டஸ் சார்பாகப் பெறப்பட்ட கோலை டுஸன் விளாகோவிச் பெற்றதோடு, மிலன் சார்பாகப் பெறப்பட்ட கோலை லொட்டரோ மார்டினெஸ் பெற்றார்.



இளையோர் அணியை

# வென்றது இளையோர் அணி



அஸ்ஹர் இப்றாஹீம்

சாய்ந்தமருது பிரதேசத்தில் இளையோரை கிரிக்கெட் துறையில் மேம்படுத்தும் வகையில் சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக் கழகம், கிரிக்கெட் பயிற்சிப் போட்டியொன்று கழக வீரர்களுக்கிடையில் ஒழுங்குசெய்திருந்தது.

சாய்ந்தமருது பொலிவேரியன் பொது விளையாட்டு மைதானத்தில் 21 வயதுக்குட்பட்ட இளையோருக்கும், 17 வயதுக்குட்பட்ட இளையோருக்குமிடையில் இப்போட்டி இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய 21 வயதுக்குட்பட்ட இளையோர் அணி, 14 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 99 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய 17 வயதுக்குட்பட்ட இளையோர் அணி 14 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 63 ஓட்டங்களையே பெற்று 36 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இப்போட்டியின் நாயகனாக 21 வயதுக்குட்பட்ட இளையோர் அணி வீரர் அஸ்கத் தெரிவு செய்யப்பட்டார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 28, நவம்பர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.